[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 பிப்ரவரி 20

கருத்துகளை, பேசுகின்ற உங்கள் கட்சி உறுப்பினரிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) அதுபோன்றே செய்துவிடுங்கள். மிக்க நன்றி. (குறுக்கீடு)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. நன்றியெல்லாம் ஒன்றும் தேவை இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். எனக்கு நேரமில்லை. திரு. துரைமுருகன் அவர்கள், நீங்கள் மற்ற நேரத்தில் பேசுங்கள். இப்பொழுது நேரமில்லை, உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 234 முதல் 238 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும்*

2015 பிப்ரவரி 20] [திரு. ஆர். சின்னசாமி]

தருமமே வெல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அடிப்படையில் சூழ்ச்சி, சதி அனைத்தையும் வென்று, நீதியைப் பெற்று, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் இந்த அவையில் முதல்வராக வந்து அமர்கின்ற காலம் மிக விரைவில் வரும், வரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 5-வது அறிக்கையினை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், அரசு தலைமைக் கொறடா அவர்கள்

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரல் சுட்டும் திசையில் விடியல் தந்த தாய். விழி சுற்றும் வழியெங்கும் வெற்றிகள் குவித்துவரும் வெற்றித் தாய். இகழ்ச்சி கண்டு கலக்கமின்றி, புகழ்ச்சி கண்டு மயக்கமின்றி, நினைப்பதையெல்லாம் நிஜமாக்கி, குன்றாத உறுதியுடன் குன்றென நிமிர்ந்து நிற்கும் நம் கொள்கைத் தாய். தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் பஞ்சமின்றி நிறைந்து நிற்கும் அன்புத் தாய். கோடி வார்த்தைகள் கொண்டு அர்ச்சனை செய்தாலும், அவை அனைத்திற்கும் ஈடுகட்ட முடியாத 'அம்மா' எனும் சொல்லுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உலகம் உள்ளவரை உரிமை பெற்றுள்ள உத்தமத் தாய். ஏழைகளின் நெஞ்சத்தில், நல்லோர்கள் உள்ளத்தில் நற்றமிழர் எண்ணத்தில் வற்றாத புகழோடு வாழ்கின்ற வாகைத் தாய். கழகத்தின் உயிரெழுத்து, தொண்டர்களின் மெய்யெழுத்து, தமிழர்களின் உயிர்மெய்யெழுத்து, அறிவு, ஆற்றல், தானம், தருமம், கருணை, பாசம், ஈவு, இரக்கம் இவை அனைத்தும் கலந்த கலைமகள். பொன்மனத் தலைவி, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். 2015 ஆம் ஆண்டின் ஆளுநர் உரைக்கு நன்றி